PTF/01/Circular/01 2020.11.02

சுற்றறிக்கை இலக்கம்: PTF/ 03/2020(VI)

**சகல மாவட்டச் செயலாளர்கள் மற்றும்**
**பிரதேச செயலாளர்களுக்கும்**

**தற்போது ஏற்பட்டுள்ள பேரிடர் நிலைமை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்குதல்**

COVID-19 தொற்று நிலைமை காரணமாக ஒரு வார காலத்திற்கு மேலாக ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களிலுள்ள மக்கள் தமது அன்றாட வாழ்வாதாரங்களை இழந்துள்ளமையினால், அவர்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக ஒரு குடும்ப அலகுக்கு மாதமொன்றுக்கு 5,000 ரூபா கொடுப்பனவொன்றைச் செலுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2. இதற்கு முன்பு வெளியிடப்பட்டுள்ள PTF/03/2020 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு ஏற்ப இதற்கான பயனாளிகளைத் தெரிவுசெய்ய வேண்டும் என்பதுடன், கடந்த COVID-19 தொற்று நிலைமையின்போது 5,000 ரூபாயினைச் செலுத்துவதற்குத் தெரிவுசெய்யப்பட்ட இரண்டாம் சுற்றைச் சேர்ந்த பயனாளிகள் இதற்குத் தகுதி பெறுவர். அத்துடன், இச்சந்தர்ப்பத்தில் வருமானங்களை இழந்துள்ள, இந்தக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியான குடும்ப அலகுகள் இருப்பின், கிராமியக் குழுவின் விதந்துரையின் அடிப்படையில் பிரதேச செயலாளரின் அனுமதியின் பின்பு தெரிவுசெய்யப்பட்ட குடும்ப அலகுகளுக்கும் ஏற்புடைய பயன்களை வழங்க முடியும்.

3. மேலும், சுகாதாரப் பிரிவினரின் நேரடி அறிவுறுத்தலின் அடிப்படையில் தமது வீட்டினுள்ளேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ள (Home quarantine) குடும்பங்களுக்குத் தேவையான 10,000 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் அடங்கிய பொதியொன்றை வழங்குவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதனை ஒரே தடவையிலோ அல்லது 5,000 ரூபா பெறுமதியான பொருட்கள் அடங்கிய 02 பொதிகளாகவோ வழங்க முடியும்.

4. அத்துடன், சுகாதாரப் பிரிவினரால் முடக்கப்பட்ட கிராமங்களாகப் (Lockdown) பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களிலுள்ள வருமானங்களை இழந்த குடும்ப அலகுகளுக்கும் 10,000 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் அடங்கிய பொதியொன்றை வழங்க முடியும். எனினும், ஏதேனும் குடும்ப அலகொன்றுக்கு 10,000 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் அடங்கிய பொதி மற்றும் 5,000 ரூபா கொடுப்பனவு ஆகிய இரண்டையும் பெற்றுக்கொள்வதற்கான உரிமை கிடையாது.

5. மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களினால் இந்த அலுவல்கள் வழிநடாத்தப்படுவதுடன், தேவைப்படின் பாதுகாப்புப் பிரிவினரது ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொள்ள முடியும்.

**காமினீ எஸ். செனரத்**
பிரதம அமைச்சரின் செயலாளர்

**பிரதிகள்:**

1. ஜனாதிபதியின் செயலாளர்
2. செயலாளர், நிதியமைச்சு
3. செயலாளர், அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
4. செயலாளர், உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு
5. செயலாளர், சுகாதார அமைச்சு
6. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்
7. இராணுவத் தளபதி
8. பொலிஸ்மா அதிபர்